Deposition of Witness for : PW-1 | Date : 25/04/2023

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 25/04/2023 |
| Case No. | : **O.S. 41/2021** | Nationality | : Indian |
| Name | : பன்னீர்செல்வம் | Religion | : |
| Father's/Husband's Name | : ரெங்கநாதன் | Age | : 70 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கோரி யாருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுந்தரேசன் என்பவருக்கு எதிராக நான் விவசாயம் செய்வதை தடுக்க கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வெளிநாடு வாழ் இந்தியர் என்றால் சரிதான். எந்த தேதியில் இருந்து நான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் 2017 ம் ஆண்டில் இருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2017 ம் ஆண்டுக்கு முன்பு யார் விவசாயம் செய்தார் என்றால் நான் தான் விவசாயம் செய்தேன். எனது மனைவியும் விவசாயம் செய்தார்.

2. 2017 ம் ஆண்டிற்கு முன்பு நானும் எனது மனைவியும் தாவா சொத்தில் விவசாயம் செய்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2017 ம் ஆண்டிற்கு முன்பு நானும் எனது மனைவியும் தாவா சொத்தில் விவசாயம் செய்ததாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுந்தரேசன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றாலும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவரது மகன்கள் என்றாலும் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

3. கடந்த 1996 ம் ஆண்டு 1ம் பிரதிவாதி சுந்தரேசன் என்பவருக்கு எதற்காக நான் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் தாவா சொத்தினை பராமரிப்பதற்காக எழுதி கொடுத்தேன். நான் வெளிநாட்டில் வசித்து வருவதால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை பாதுகாத்து பராமரித்து சாகுபடி செய்வதற்காக மேற்படி பொது அதிகார ஆவணத்தை எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்குரை பாரா-2 ல் நான் வெளிநாட்டில் இருந்ததாலும், அவ்வப்போது ஊருக்கு வந்து சென்றதாலும், நிரந்தரமாக தங்கி நிலங்களை என்னால் நேரடியாக நிர்வாகம் செய்யவும், பாதுகாக்கவும் முடியாமல் இருந்ததால் என்னுடைய உடன்பிறந்த சகோதரரான 1ம் பிரதிவாதிக்கு தாவா நிலங்களை நிர்வகிக்க 21/08/1996 ம் தேதி ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தை நான் எப்போது ரத்து செய்தேன் என்றால் 01/02/2021 ம் தேதி ரத்து செய்தேன். பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்த பிறகு தான் நான் தாவா சொத்தினை விவசாயம் செய்ய சென்றேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே விவசாயம் செய்தேன். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் எந்த தேதியில் பிரச்சனை செய்தார் என்றால் 25/01/2021 ம் தேதி பிரச்சனை செய்தார். 1ம் பிரதிவாதி பிரச்சனை செய்த பிறகு தான் நான் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை தற்போது வரை நான் சாகுபடி செய்து வருவதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.